இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 05-12-2024

# இதோ! மூன்றாவது பேரிடரும் வந்தே விட்டது...

இதுவரை ஏற்பட்ட இரண்டு பேரிடர்களுக்கும் நிவாரண நிதி தரவில்லை ஒன்றிய பா.ஜ.க. அரசு. இப்போது இதோ! மூன்றாவது பேரிடரும் வந்துவிட்டது.

**தமிழ்நாட்டில் ஃபெஞ்சல் புயலினால் ஏற்பட்டுள்ள தாக்கத்தினையும், அதனால் ஏற்பட்டுள்ள கடுமையான மற்றும் வரலாறு காணாத சேதங்களையும் கவனத்தில் கொண்டு சேதமடைந்த உள்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதாரத்தை தற்காலிகமாக சீரமைக்க தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக 2 ஆயிரம் கோடி ரூபாய் நிதியினை விடுவித்திடுமாறு கோரி மாண்புமிகு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் அனுப்பி இருக்கிறார்கள்.**

ஃபெஞ்சல் புயல் 23, நவம்பர் 2024 அன்று குறைந்த தாழ்வழுத்தப் பகுதியாக உருவெடுத்து, தமிழ்நாட்டின் 14 மாவட்டங்களில் வரலாறு காணாத பேரழிவை ஏற்படுத்தி உள்ளது.

தொடக்கத்தில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களில் கனமழை பெய்ததைத் தொடர்ந்து, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களில் மிக கனமழை பெய்தது. டிசம்பர் 1 ஆம் தேதி ஃபெஞ்சல் புயல் கரையைக் கடந்தபோது, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் காற்றின் வேகம் அதிகம் ஆனதால் சாலைகள் மற்றும் மின் இணைப்புகள் கடுமையாக சேதமடைந்தன. தருமபுரி, கிருஷ்ணகிரி, ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர் உள்ளிட்ட உள்மாவட்டங்களில் கனமழை காரணமாக மிகப்பெரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

**இந்தப் பேரிடரால் மொத்தம் 69 இலட்சம் குடும்பங்களும், 1.5 கோடி பேர்களும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்று வருத்தத்துடன் தனது கடிதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இந்தப் பேரழிவின் காரணமாக, 12 மனித உயிரிழப்புகளும், 2,416 குடிசைகள், 721 வீடுகள் மற்றும் 963 கால்நடைகள் இழப்புகளும் ஏற்பட்டுள்ளதோடு, 2,11,139 ஹெக்டேர் பரப்பளவிற்கு விவசாய மற்றும் தோட்டக்கலை நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.**

**புயல் வெள்ளத்தினால் 9,576 கி.மீ சாலைகள், 1,847 சிறுபாலங்கள் மற்றும் 417 குளங்கள் சேதமடைந்துள்ளதாகவும், 1,649 கி.மீ அளவிற்கு மின் கடத்திகள், 23,664 மின்கம்பங்கள் மற்றும் 997 மின்மாற்றிகள் சேதமடைந்துள்ளதாகவும், 1,650 பஞ்சாயத்து கட்டிடங்கள் 4,269 அங்கன்வாடி மையங்கள், 205 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 5,936 பள்ளிக் கட்டடங்கள், 381 சமுதாயக் கூடங்கள் மற்றும் 623 குடிநீர் வழங்கல் பணிகள் கடுமையாக சேதமடைந்துள்ளன.**

இந்தச் சேதங்கள் குறித்து, தமிழ்நாடு அரசு முதற்கட்ட மதிப்பீட்டை மேற்கொண்டு, தற்காலிக சீரமைப்பு பணிகளுக்கு ரூ.2,475 கோடி தேவைப்படுகிறது என முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இதில் முதல் கட்டமாக ரூ.2 ஆயிரம் கோடியை வழங்க வேண்டும் என்று கோரி இருக்கிறார்கள். மக்கள் எதிர்கொண்ட பேரிடரை ஒன்றிய பா.ஜ.க. அரசு உணருமா எனத் தெரியவில்லை.

கடந்த ஆண்டில் இரண்டு முறை புயல்கள் தாக்கி, கடும் இயற்கைப் பேரிடர்களை தமிழ்நாடு சந்தித்தது. இவற்றுக்கான நிவாரணமாக, 37 ஆயிரம் கோடி ரூபாய் கேட்டோம். ஆனால் ஆண்டுதோறும் வழக்கமாக வழங்கப்பட வேண்டிய ரூ.276 கோடி நிதியை அளித்துவிட்டு, ஏமாற்றி விட்டார்கள்.

தமிழ்நாடு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, டெல்லி சென்று கடந்த ஜூன் 22 ஆம் தேதி நடைபெற்ற நிதி அமைச்சர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார். **“இரண்டு இயற்கை பேரிடர்களை தமிழ்நாடு சந்தித்தது. இதற்கான நிவாரண நிதியாக ரூ.37,906 கோடியைக் கேட்டிருந்தோம். ஆனால் ரூ.276 கோடியைத் தான் இதுவரை கொடுத்துள்ளீர்கள். இது தமிழ்நாட்டுக்கு இழைக்கப்பட்ட மிகப்பெரிய அநீதியாகும்”** என்று குற்றம் சாட்டினார். இதற்கு ஒன்றிய அரசிடம் இருந்து எந்த பதிலும் இதுவரை இல்லை.

ஆந்திர தலைநகர் அமராவதி மேம்பாட்டுக்கு ரூ.15 ஆயிரம் கோடி. பீகாரில் நெடுஞ்சாலைத் திட்டங்களுக்கு ரூ.26 ஆயிரம் கோடி, பீகார் வெள்ள நிவாரணப் பணிகளுக்கு ரூ.11,500 கோடி ஒதுக்கினார்கள். ஒன்றிய நிதி நிலை அறிக்கையில். அந்த மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கக் கூடாது என்று சொல்லவில்லை. தமிழ்நாட்டுக்கு ஏன் ஒதுக்கவில்லை என்றுதான் கேட்கிறோம். ஆந்திராவும், பீகாரும் ஒன்றிய அரசைக் காப்பாற்றும் மாநிலங்கள் என்பதை அறியாதவர்கள் அல்ல நாம். தமிழ்நாட்டில்தான் பா.ஜ.க.வைக் காப்பாற்ற யாராவது இலவச ஆக்ஸிஜன் தர வேண்டும் என்பதும் நம்மை விட பா.ஜ.க. தலைமைக்கு நன்கு தெரியும். அதனால்தான் தமிழ்நாட்டை ஒதுக்கியே, தீண்டாத மாநிலமாக வைத்துள்ளார்கள்.

இந்தியாவின் மிகப்பெரிய பொருளாதாரம் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு இன்று வளர்ந்து நிற்கிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.87 விழுக்காடு என்ற அளவில் தமிழ்நாடு பங்களிப்பினை வழங்குகிறது. ஆனாலும் ஒன்றிய அரசை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நிலையில்தான் வைத்துள்ளார்கள்.

**“ஒன்றிய அரசால் பகிர்ந்தளிக்கப்படும் நிதியிலிருந்து குறைந்தபட்சமாக 50 சதவீதம் மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும். வரி அல்லாத வருவாய்களையும் பகிர்ந்தளிக்கப்படும் நிதிகளின் தொகுப்பில் இணைப்பதற்கு உரிய அரசமைப்புச் சட்டத் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். மாநில அரசின் பட்டியலில் இடம்பெற்றுள்ள இனங்களின் கீழ் நிறைவேற்றப்படும் நலத்திட்டங்களுக்கு 75 சதவீத பங்களிப்பை ஒன்றிய அரசு வழங்க வேண்டும். மாநில பேரிடர் மேலாண்மை நிதியினை 2026-27 ஆம் ஆண்டு காலகட்டத்தில் 50 சதவீதமாக உயர்த்தி, 90:10 என்ற அளவில் ஒன்றிய மாநில நிதிப் பங்கீட்டில் வழங்க வேண்டும்”** - என்ற கோரிக்கைகளை 16 ஆவது நிதிக்குழுவிடம் தமிழ்நாடு அரசு வைத்துள்ளது.

**ஒவ்வொரு இயற்கை பேரிடர் வரும் போதும் ஒன்றிய அரசாங்கத்தின் செயற்கைப் பேரிடர்தான் நம் நினைவுக்கு வந்து நிலைகுலைய வைக்கிறது.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (3.12.2024) அண்ணா அறிவாலயத்தில், மாற்றுத் திறனாளிகள் தினத்தையொட்டி பல்வேறு மாற்றுத் திறனாளிகள் சங்கத்தினர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.



## கடலூர் மாவட்டத்தில்

# மழை வெள்ளப் பாதிப்பு குறித்து ஆய்வுக் கூட்டம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது!

கடலூர், டிச.05-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (03.12.2024) கடலூர் மாவட்டத்தில் ஃபெஞ்சல் புயல் வெள்ள பாதிப்பு குறித்து வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் முன்னிலையில் பல்வேறு பகுதிகளில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேல்பட்டாம்பாக்கம், ஜி.எஸ்.மஹாலில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு மையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள 1200 பொதுமக்களுக்கு புடவை, போர்வை, ஐந்து கிலோ அரிசி, பிஸ்கட், பிரட், தண்ணீர் பாட்டில் உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள் மற்றும் மதிய உணவினை வழங்கினார்.

கடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சின்ன கங்கணாங்குப்பம் பகுதியில் பொதுப்பணித்துறை மூலம் வெள்ள பாதிப்புகள், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து அமைக்கப்பட்டிருந்த விளக்க புகைப்படத்தினை பார்வையிட்டு, தென்பெண்ணையாற்றின் தற்போதைய நீர்வரத்து குறித்தும், குடியிருப்பு பகுதிகளில் மழைநீர் புகுந்தது குறித்தும் பார்வையிட்டார்.

சின்னகங்கணாங்குப்பம் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த மருத்துவ முகாமினை பார்வையிட்டு, மழைநீர் சூழ்ந்த குடியிருப்பு பகுதிகளை பார்வையிட்டு பொதுமக்களிடம் குறைகளை கேட்டு, போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட மஞ்சக்குப்பம், விக்னேஷ் மஹாலில் அமைக்கப்பட்டிருந்த நிவாரண முகாமில் 600 நபர்கள் தங்கவைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு 5 கிலோ அரிசி, போர்வை, கைலி, சேலை, பால் பாக்கேட், பிரட், பிஸ்கட், தண்ணீர் பாட்டில் உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கி பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

தொடர்ந்து, கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வெள்ள பாதிப்பு, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

ஆய்வுக்கூட்டத்தில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்ததாவது:-

கடலூர் மாவட்டத்தில் தென்பண்ணையாற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக 4,321 குடும்பங்களைச் சேர்ந்த 6,601 ஆண்களும் 7,108 பெண்களும் 1,129 குழந்தைகள் என மொத்தம் 15,712 நபர்கள் மீட்கப்பட்டு 35 நிவாரண மையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இதுவரை 36,251 நபர்களுக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையத்திற்கு இதுவரை 261 புகார்கள் வரப்பெற்று, 94 புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. 35 புகார்களுக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

341 குடிசை வீடுகள் பகுதியளவிலும், 10 குடிசை வீடுகள் முழுவதும் சேதமடைந்துள்ளது. 71 கால்நடைகள் மற்றும் 2520 கோழிகள் உயிரிழந்துள்ளது. இவர்களுக்கான இழப்பீட்டு தொகை யினை விரைந்து வழங்கிட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடலூரில் 2 பெண்கள், ஒரு பெண் குழந்தை என மொத்தம் 3 நபர்கள் உயிரிழந்துள்ளனர். மேலும், 2 நபர்கள் லேசான காயத்துடன் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

360 மின்கம்பங்கள் மற்றும் 2 மின்மாற்றிகள் சேதமடைந்துள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. அதில் 77 மின்கம்பங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. மேலும், 1.7 கி.மீ நீளத்திற்கான மின்பாதை சேதடைந்துள்ளது.

கடலூர் மாவட்டத்தில் 51,010 ஹெக்டர் விவசாய நிலங்கள் நீரால் சூழப்பட்டுள்ளது என கணக்கிடப்பட்டுள்ளது.

அனைத்து பகுதிகளிலும் மழை வெள்ள பாதிப்பு குறித்த மீட்புப் பணிகளில் 9,507 அலுவலர்கள் மற்றும் தன்னார்வலர்களும் ஈடுபட்டு வருகின்றனர். பொதுப்பணித்துறை மூலம் தேவையான இடங்களில் உள்ள குடியிருப்பு பகுதிகளில் ஆற்றுநீர் வராமல் தடுப்பதற்காக 22,000 மணல் மூட்டைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

வெள்ளநீர் தேங்கியுள்ள பகுதிகளில் விரைந்து மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு பொதுமக்களுக்கு இயல்பு நிலையினை ஏற்படுத்திட வேண்டும். அனைத்து அலுவலர்களும் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியினை முறையாக மேற்கொண்டு பொதுமக்களை பாதுகாத்திட வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன், விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர்.இராதாகிருஷ்ணன், மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரிராஜா, ஊரக வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன் தீப் சிங் பேடி, தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக மேலாண்மை இயக்குநர்/தலைவர் ம.நந்தகுமார், தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டு திட்ட இயக்குனர்/மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ராமன், மாவட்ட ஆட்சித்தலைவர் சி.பி. ஆதித்யா செந்தில்குமார், மாநகராட்சி துணைமேயர் பா.தாமரைச்செல்வன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் இயக்குநர் திருமதி இரா.சரண்யா, மாநகராட்சி ஆணையாளர் மரு.எஸ்.அனு உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## வாய்ச்சவடால் விடும் எடப்பாடி பழனிசாமிக்கு மனசாட்சி இருந்தால்,

# வெள்ள நிவாரண நிதி அளித்திட ஒன்றிய அரசை வலியுறுத்த வேண்டுமே தவிர தமிழ்நாடு அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடாது!

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு பதிலடி!

சென்னை,டிச.5-

**“வாய்ச்சவடால் விடுகின்ற எதிர்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமிக்கு மனசாட்சி இருந்தால், வெள்ள நிவாரண நிதியை அளிக்கும்படி ஒன்றிய அரசுக்கு அழுத்தம் தரவேண்டுமே தவிர, தமிழ்நாடு அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்காமல் இருக்க வேண்டும்” என அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு குறிப்பிட்டார்.**



*சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களை சந்தித்து அமைச்சர் பி.கே. சேகர்பாபு கூறிய தாவது:-*

*பெஞ்சல் புயல் 6 நாட்கள் போக்கு காட்டி 30ஆம் தேதி கரையைக் கடந்தது. வானிலை ஆய்வு மையம் மற்றும் தனியார் வானிலை ஆய்வாளர்களின் புயல் தொடர்பான கருத்துகளை உள்வாங்கி முதலமைச்சர் அவர்கள் போர்க்கால அடிப்படையில் எடுத்த துரித நடவடிக்கையின் காரணமாக, கடந்த காலங்களில் சென்னையில் மழை பெய்தாலே 3 நாட்கள் வரை ஸ்தம்பித்த நிலையில், சென்னையில் 13 செ.மீ. மழை பெய்த 12 மணி நேரத்திற்குள்ளாகச் சென்னை இயல்பு நிலைக்கு திரும்பியது.*

*பெஞ்சல் புயல் ஒரிரு நாட்கள் ஒரே இடத்தில் மையம் கொண்டு நின்றதை வானிலை நிபுணர்கள் கூறும்போது, 50 ஆண்டு காலப் புயல் வரலாற்றில் இதுவே முதல்முறை என்கின்றனர்.*

### பொறுப்பு அமைச்சர்கள்

*உடனடியாக கடலூர் மாவட்டத்திற்கு எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களும், சி.வி.கணேசன் அவர்களும், திருவண்ணாமலை மாவட்டத்திற்கு எ.வ.வேலு அவர்களும் விழுப்புரம் மாவட்டத்திற்கு பொன்முடி அவர்களும், சிவசங்கர் அவர்களும், செந்தில்பாலாஜி அவர்களும் நிவாரணப் பணிகளுக்கான பொறுப்பு அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்; கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரிக்கு முத்துசாமி அவர்களும், ராஜேந்திரன் அவர்களும் பொறுப்பு அமைச்சர்களாகச் செயலாற்றி வருகிறார்கள்.*

*புயல், மழை, வெள்ளம் என்றவுடன் நவம்பர் 30 மற்றும் டிசம்பர் 1ஆம் தேதி முதலமைச்சர் அவர்கள் உடனடியாக களத்திற்கு சென்று பணிகளை வேகப்படுத்தி இயல்பு வாழ்க்கை திரும்பியதைக் கண்டு பொதுமக்களின் பாராட்டு மழையில் நனைந்து வந்தார் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.*

*துணை முதலமைச்சர் அவர்களும் களத்தில் பம்பரமாகச் சுழன்று, பணிகளை முடுக்கி விட்டு சுவடே இல்லாத அளவிற்கு சென்னை மாறியிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தார். அதே போல் கடலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களுக்கும் முதலமைச்சர் நேரில் சென்றார். துணை முதலமைச்சர் பல்வேறு மாவட்டங்களில் சுற்றி வந்து கொண்டிருக்கிறார். வெள்ளம் பாதித்த 5 மாவட்டங்களிலும் போர்க்கால அடிப்படையில் நிவாரண பணிகளை மேற்கொண்டுள்ளார்.*

*இன்று முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசிடம் 2000 கோடி ருபாய் நிவாரணம் கேட்டு கடிதம் எழுதியுள்ளார். ஒன்றிய அரசு, உதவி செய்வதாக அறிவித்ததுடன் அப்படியே நின்றுகொண்டிருக்கும் வேளையில், மாநில அரசு பாதிக்கப்பட்ட கால்நடைகள், வீடுகள், பயிர்கள் போன்றவற்றிற்கு நிவாரண உதவிகளும் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*பெருமழை, பெரும் சீற்றத்தின் போது ஆளும்கட்சிக்கு உதவியாக இல்லாவிட்டாலும், குறைகளைச் சுட்டிக்காட்டும் இடத்தில் உள்ள எதிர்கட்சிகள் வஞ்சக சூழ்ச்சியோடு அவதூறுகளை அள்ளி வீசிக் கொண்டுள்ளனர். எதிர்கட்சி தலைவர் அவர்கள் அரசியலில், கள ஆய்வு கூட்டத்தைக்கூட நடத்த முடியாத இடத்தில் இருக்கின்றார். சேலத்திற்கும் சென்னைக்கும் மட்டுமே அரசியல் செய்யும் எடப்பாடி பழனிசாமி, சாத்தனூர் அணை முன்னறிவிப்பு இல்லாமல் திறக்கப்பட்டதால்தான் அதிக பாதிப்பு என கூறியுள்ளார்.*

*கடந்த காலத்தை அவர் திரும்பி பார்க்கவேண்டும். 2015ஆம் ஆண்டு செம்பரம்பாக்கம் ஏரியை முன்னறிவிப்பு இல்லாமல் திறந்த காரணத்தால் 250க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர் என்பதை மறக்க முடியாது. பல லட்சம் வீடுகளும் சேதம் அடைந்தன.*

*சாத்தனூர் அணையைப் பொறுத்தவரை முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, 25 ஆம் தேதியிலிருந்து தண்ணீர் படிப்படியாக வெளியேற்றப்பட்டு உள்ளது. முன்னறிவிப்பு கொடுத்து முதற்கட்டமாக 25ஆம் தேதி 10 ஆயிரம் கன அடி நீர் வெளியேற்றப்பட்டுள்ளது. இதே போல் 5 முறை எச்சரிக்கப்பட்டு பின்னரே தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. இறுதியாக 1 லட்சத்து 68 ஆயிரம் கன அடி நீரை முன்னறிவிப்பு செய்துதான் வெளியேற்றினோம். அதனால்தான் எந்த வித உயிர் சேதமும் இல்லாமல் தவிர்க்கப்பட்டது. உண்மையிலேயே எடப்பாடி பழனிசாமிக்கு மனசாட்சி இருந்திருந்தால் உயிர்சேதம் இன்றி எடுத்த நடவடிக்கைக்காகத் தமிழக அரசிற்கு நன்றி தெரிவித்திருக்க வேண்டும். அதைவிடுத்து, வஞ்சக எண்ணத்தோடு குறை சொல்லி வருகிறார்.*

### போர்க்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கை!

*வெள்ள நிவாரண பணிகளில் முதலமைச்சரின் போர்க்கால அடிப்படையிலான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நம் மாநிலம் மட்டும் அல்லாது அண்டை மாநிலமும் பாராட்டி வருகின்றனர்.*

*வாய்ச்சவடால் விடுகின்ற எதிர்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமிக்கு மனசாட்சி இருந்தால், வெள்ள நிவாரண தொகையை ஒன்றிய அரசிடமிருந்து நிதியைக் கேட்டு பெற அழுத்தம் தரவேண்டுமே தவிர, தமிழக அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்குக் குந்தகம்விளைவிக்காமல் இருக்க வேண்டும்.*

*விழுப்புரம் மாவட்டத்தில், திருவெண்ணைநல்லூர் ஒன்றியத்தில் இருக்கும், இருவேல்பட்டு மற்றும் அரசூர் பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்து வடிந்த பின்னர் அங்கிருக்கும் மக்களுக்கு நிவாரண பணிகளை வழங்கவும், ஆறுதல் கூறவும் அமைச்சர் பொன்முடி நேரடியாகச் சென்றிருந்தார். அந்த இடத்தில் குறிப்பிட்ட கட்சியில் மகளிரணி பொறுப்பில் இருக்கும் விஜயராணி என்பவரும், அவரது உறவினர் ராமர் என்பவரும் உள்நோக்கத்தோடு வேண்டும் என்றே அமைச்சர் மீது சேற்றை வாரி வீசியுள்ளனர்.*

### பொய் வதந்தி!

*ஒருபுறம், நிவாரண பணிகளை அறிக்கையின் மூலம் பொய் வதந்தி பரப்பி முடக்க நினைக்கின்றனர். மறுபுறம் மக்கள் நல பணிகளில் ஈடுபடுவர்களை அச்சுறுத்தும் வகையிலும், பணிகளைத் தடுக்கும் வகையிலும் இதுபோன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். இதுபோன்ற தடைகளைத் தாண்டி வளர்ந்த இயக்கம்தான் திராவிட முன்னேற்ற கழகம். இதுபோன்ற எதிர்ப்புகளைக் கண்டு அஞ்சாமல், மக்கள் பணிகளில் தொடர்ந்து பயணிப்போம் என்பதை எடுத்துக்காட்டும் வகையில்தான், அந்த நிகழ்விற்கு பிறகும் அமைச்சர் பொன்முடி நிவாரண பணிகளில் ஈடுபட்டு வருகிறார்.*

*தமிழ்நாடு அரசைப் பொறுத்தவரை இந்திய வானிலை ஆய்வு மையம், தனியார் ஆய்வாளர்களின் தரவுகளை உள்வாங்கி, துறைசார்ந்த அதிகாரிகளுக்கும் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களுக்கும் உடனுக்குடன் அனுப்பிள்ளோம். அந்தந்த மாவட்ட அமைச்சர்கள் வாயிலாக முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்ந்து எடுத்துவந்துள்ளோம்.*

### கணிக்க திணறிய வானிலை ஆய்வு மையம்!

*சென்னையில் மழைக்கு ஒரு மாதம் முன்னதாகவே முன்னெச்சரிக்கை நடவடிக்கையை அரசு மேற்கொண்டது. 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சமூக ஆர்வலர்களை ஒருங்கிணைந்திருந்தோம். மாநகராட்சி சார்பில் 22 ஆயிரம் ஊழியர்களை ஈடுபடுத்தியிருந்தோம். 800க்கும் அதிகமான நீர் வெளியேற்றும் இயந்திரங்கள் தயார் நிலையில் இருந்தன. 700 மரம் அகற்றும் இயந்திரங்கள் மற்றும் 36 படகுகள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது.*

*பெஞ்சல் புயலின் தாக்கத்தை இந்திய வானிலை ஆய்வு மையமே கணிக்க திணறியது. அப்போதும் அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் அமைச்சர்களை ஒருங்கிணைத்து முதலமைச்சர் பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டார். வானிலை தரவுகளை மீறி புயலின் பாதிப்பு இருந்தது. அரசு தயார் நிலையில் இருந்த காரணத்தால்தான் உயிர் சேதம் தவிர்க்கப்பட்டது.*

*விஞ்ஞான ரீதியாக நாம் வளர்ந்திருந்தாலும் ஒருசில பேரிடர்களை கணிக்க முடியாத இடத்தில்தான் நாம் உள்ளோம். இதையும் ஒரு பாடமாக எடுத்துக்கொண்டு வரக்கூடிய காலங்களில், நிலச்சரிவு ஏற்படும் என கருதக்கூடிய பகுதிகளில் வசிக்கும் மக்களை வேறு பகுதியில் மாற்ற முதலமைச்சர் அறிவுறுத்தியுள்ளார். அதுதொடர்பான நடவடிக்கையும் எடுக்கப்படும்.*

*இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு பேட்டியளித்தார்.*